DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

*******

IN THE COURT OF DISTRICT MUNSIF–CUM–JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| CC. No. | 493 /2023 |
| Witness: | அ.சா.3 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | கபிலன் |
| **Father' Name** | ~ | சிவசண்முகம் |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of Dt. 29.05.2025.**

**முதல் விசாரணை**

நான் தற்போது பம்மலில் வசித்து வருகிறேன். நான் தற்போது பி.எல் படித்து வருகிறேன். அ.சா.1 எனது தகப்பனார். அ.சா.2 எனது தாயார். கடந்த 16.3.2022 அன்று காலையில் வீட்டை பூட்டி விட்டு எனது குடும்பத்துடன் டார்ஜிலிங் வரை சுற்றுலா சென்றுவிட்டு 23.3.2022 அன்று இரவு 1.30 மணி அளவில் என் வீட்டிற்கு வந்து பார்த்தபோது முன்பக்க கதவு உடைக்கப்பட்டு இருந்தது. வீட்டின் உள்ளே அலமாரியில் பொருட்கள் சிதறி கிடந்தன். பீரோ உடைக்கப்பட்டு துணிமணிகள் சிதறி கிடந்தன. நான் பீரோவில் வைத்திருந்து சுமார் 30 சவரன் தங்க நகைகள் மற்றும் குடும்ப செலவிற்காக வைத்திருந்த ரூ.20,000 வரையிலான ரொக்க பணம் திருடு போய் இருந்தது தெரிய வந்தது.

இது தொடர்பாக காவல் நிலையத்தில் எனது கணவர் அ.சா.1 புகார் அளித்தார். அதன் பின்னர் நானும் அ.சா.1 சேர்ந்து எவ்வளவு நகைகள் திருடு போனது என சரி பார்த்த போது 82 சவரன் நகைகள் திருடு போனதாக தெரிய வந்தது. போலிசார் மீண்டும் என்னை விசாரணை செய்தனர். போலிசார் மேற்படி 82 சவரன் நகைகளை கண்டுபிடித்து விட்டதாக தகவல் அளித்தார்கள். திருடு போன பணத்தையும் போலிசார் கண்டு பிடிக்கவில்லை. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. எதிரியிடம் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அறிவுறுத்தியும் எதிரி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை. எனவே எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என சாட்சியம் முடிக்கப்படுகிறது.
S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.
S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.